**மாவனல்ல பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாவனல்ல பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டு கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் மாவனல்ல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| சபை அதிகார எல்லையில் காணிகளை பிரிக்கும் போது பொது வசதிகளுக்காக சபைக்கு ஒதுக்கப்பட்ட 09 காணித் துண்டுகளின் பெறுமதி ரூபா 6,875,000 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | இவ் 09 காணித் துண்டுகளினது பெறுமதியை 2021 ஆண்டு இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது மூலதனமாக்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சபைக்கு சொந்மான காணிகள் மூலதனமாக்கப்பட வேண்டும். |

#### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்ககுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| 02 கணக்கு விடயங்களிற்குரிய நிதிக்கூற்றுக்கள் பிரகார பெறுமதிதி ரூபா 109,799,630 மற்றும் அட்டவணை பிரகார பெறுமதி ரூபா 109,554,249 ஆனதில் ரூபா 311,461 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | ஊழியர் கடன் கணக்கு வித்தியாசத்தை தற்போது சரிசெய்து கொண்டிருப்பதாகவும் மாகாண சபை கடன்கொடுனர் மீதி மற்றும் மாகாண சபை நடைமுறைக் கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகையாக காட்டப்பட்டள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் மீதிகள் அதனுடன் தொடர்புடைய அட்டவணைகளுடன இணங்க வேண்டும் |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>நிதிப் பிரமாணம் 571(3) | திருப்பி செலுத்தாத வேலை ஒப்பந்த வைப்புக்கள், இறைச்சி/மீன் கடைகள் மற்றும் உல்லாச வரி வைப்பு ரூபா 1,253,375 தொகை தொடர்பாக தொடர்புடைய பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இவ்விடயங்கள் தொடர்பில் எதிர் காலத்தில் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 200,260,359 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 124,649,146 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி மற்றும் குத்தகை | | |
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை வீதவரி குத்தகை மீதி ரூபா 11,617,565 தொகையை அறவிட நடவைடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2020 ஆண்டு பூராவும் நிலவிய கொரோனா நிலமை காரணமாக இத் தொகையை அறவிடுவதில் ஓரளவு தாமதமொன்று ஏற்பட்டுள்ளதாகவும் நிலுவையுடன் அறவிட்டு வீதிவரி தொகையை நள்ள நிலைக்கு கொண்டு செல்ல இவ்வாண்டு அனைத்து முயற்சிகளையும் எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் பிரகாரம் செயற்பட்டு நிலுவை வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் ஏக்கர் வரி நிலுவை மீதி ரூபா 189,217 ஆனது. | இரண்டு ஆண்டுகளாக நாட்டினுள் நிலவிய கொரோனா நிலமை காரணமாக இவ் வருமானத்தை அறவிடுவதில் சில குறைவுகள் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை ஏக்கர் வரியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(ஆ) **வாடகை**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை வாடகை ரூபா 12,618,066 தொகையை அறவிட நடவைடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் மேலும் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வாடகையை அறவிட வேண்டும். |

(இ) **நீதிமன்ற தண்டப்பணம்**

| | | |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2020 திசெம்பர் 31 திகதி கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பண மீதி ரூபா 15,165,945 ஆனது. இத் தொகையினை பெற்றுக் கொள்ள தொடர்ந்து கடிதம் மூலம் மாகாண சபையை அறவூட்டிய போதும் கிடைத்திருக்கவில்லை. | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை பெற்றுக் கொள்ள தொடர்ந்து கடிதம் மூலம் மாகாண சபையை அறிவூட்டியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

## 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மாவனல்ல சாரனர் மாவத்தை புதிய வாராந்த சந்தை கட்டிடத்தில் அமைந்துள்ள குத்தகை அடிப்படையில் வழங்கியிருந்த 24 கடையறைகள் மூடப்பட்டிருந்த போதும் தொடர்ந்தும் பில்லிடலின் மூலம் ரூபா 2,153,520 போலியான வருமானம் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | புதிய வாராந்த சந்தை கடையறைகளில் வாடகை மற்றும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாத கடையறைகளை மீண்டும் சபைக்கு சுவீகரிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள 2021 மார்ச் மாதம் பொதுச் சபைக்கு சமர்ப்பிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வருமானம் ஈட்ட தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தளக்கோல வரிபட இலக்கம் 10217A/2016 கொண்ட புலுகொள்ளேவத்த மற்றும் தெல்லகஹமுலவத்த காணிகளின் 03 ஆம் இலக்க பகுதியை அபிவிருத்தி செய்ய அங்கீகாரம் வழங்கப்படாததுடன் தேசிய கட்டிடங்கள் ஆராய்சி அமைப்பினால் வழங்கப்பட்ட பரிந்துரை பிரகாரம் இப் பகுதி சதுப்பு தன்மையானதால் நிர்மாணத்திற்கு பொருத்தமில்லை என உறுதி செய்திருக்கையில், அப் பகுதி விற்கப்பட்டு வீடொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக சபையின் உரிய மேற்பார்வை இடம் பெற்றிருக்கவில்லை. | காணி அபிவிருத்தி செய்வதற்காக மாத்திரம் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதுடன் நிர்மாணம் மேற்கொள்ள அங்கீகாரம வழங்கப்படவில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்ட ரீதியற்ற நடவடிக்கைகள் தொடர்பில் சபையினால் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | தளக்கோல வரிபட இலக்கம் 9806/2015 கொண்ட வாகொள்ளேவத்த காணியை பிரித்து விற்கும் போது 05 ஆம் இலக்க பகுதிக்குரிய உட்பிரவேச பாதை மற்றும் வடிகால் தொகுதியும் 08 ஆம் இலக்க பகுதிக்குரியதாக அன்டிய வடிகால் தொகுதியும், நிர்மாணிக்கப்பட்டு இருக்காததுடன் 06 ஆம் இலக்க பகுதிக்குரியதாக அன்டிய வடிகால் தொகுதி குறைபாடுகளுடன் நிர்மாணிக்கப்பட்டு இருந்தது. அதன் பிரகாரம் தேசிய கட்டிடங்கள் ஆராய்சி அமைப்பின் 4.3 அடிப்படை நிபந்தனையை நிரைவேற்றி இருக்காததுடன் அதன் 5.3.1 இன் பரிந்துரை பிரகாரம் வரம்பு அரிப்பை குறைத்துக் கொள்ள உயிர்வேலி அல்லது ஒழுங்கான உதவு மதில் நிர்மாணிக்கப்பட்டு இருக்கவில்லை. | காணிப் பகுதிகளில் நிர்மாணம் மேற்கொள்ளும் போது மீண்டுமொரு முறை சபையினால் கட்டிட நிர்மாணத்திற்காக அங்கீகாரத்திற்கு சமர்பிக்கப்பட்டதன் பின்னர் இது தொடர்பாக கவனித்து நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தேசிய கட்டிடங்கள் ஆராய்சி அமைப்பின் நிபந்தனைகள் மற்றும் பரிந்துரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | தளக்கோல வரிபட இலக்கம் 9655/2015 கொண்ட காணியை பிரித்து விற்கும் போது தேசிய கட்டிடங்கள் ஆராய்சி அமைப்பின் நிபந்தனைகள், ஏற்பாடுகள் மற்றும் பரிந்துரைகளை கவனிக்காது அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் 54 ஆம் இலக்கப் பகுதி அபிவிருத்திக்கு பொறுத்தமில்லை என தொழிநுட்ப உத்தியோகத்தர் பரிந்துரைத்திருந்த போதும் அக் காணி விற்கப்பட்டதாக காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகார | காணி பகுதிகளின் அபிவிருத்திக்காக மாத்திரம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் குறைகளை சரிசெய்து கொள்ள சபைக்கு தலையிட்டு செய்ய முடியுமான எதுவும் இல்லையென அறிவிக்கப்பட்டுள்ளது. | தேசிய கட்டிடங்கள் ஆராய்சி அமைப்பின் நிபந்தனைகள், ஏற்பாடுகள் மற்றும் பரிந்துரைகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

சபையின் நிபந்தனை இலக்கம் 07, 14 மற்றும் 15 பிரகாரமும், மத்திய சுற்றாடல் ஆணைக்குழுவின் நிபந்தனை இலக்கம் 07 மற்றும் 2.2 பிரகாரமும் பிரகாரமும் செயற்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் குறித்த நிறுவனங்களின் பரிந்துரைகளின்றி காணியின் 01 முதல் 39 வரையான காணிப் பகுதிகள் விற்கப்பட்டுள்ளதுடன் மொத்தக் காணி 01 ஹெக்டயரிற்கு அதிகமாகையால் பொது விடயங்களிற்காக சபைக்கு ஒப்படைக்க வேண்டிய காணிப் பகுதியையும் ஒப்படைத்திருக்கவில்லை.

**3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| பொது மக்களிற்கு பிரவேசிக்கக் கூடிய பிரதேசம் ஒன்றில் புதிய வாராந்த சந்தை நிர்மாணிக்கப்படாததன் காரணமாக ரூபா 5,111,180 பெறுமதியான கட்டிடம் பயனின்றி காணப்பட்டது. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டிய இவ் விடயம் தொடர்பில் எதிர்காலத்தில் விஷேட கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | சபை அதிகார எல்லையில் 01 ஹெக்டயரை விட கூடிய காணிகளை பிரிக்கையில் பொது நடவடிக்கைகளுக்காக சபைக்கு ஒதுக்க வேண்டிய 01 ஏக்கர் 02 ரூட் 24.38 பரிசஸ் காணியை சட்ட ரீதியாக சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறித்த காணியை சுவீகரிக்க தற்போது தொடர்புடைய நிறுவனத்திற்கு அறிவித்து அனுப்பப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இவ் விடயம் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பொது நடவடிக்கைகளுக்காக சபைக்கு ஒதுக்க வேண்டிய காணியை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | புழுகொள்ளஹேன கோந்திவெலயில் அமைந்துள்ள தளக்கோல வரிபட இலக்கம் 3700 கொண்ட காணியை பிரித்து விற்கும் போது பொது நடவடிக்கைகளுக்காக சபைக்கு ஒப்படைத்திருந்த பர்சஸ் 39.9 ஆன காணிப் பகுதியிற்கு பாதுகாப்பு வேலியொன்று அமைத்திருக்காததால் அனுமதியற்ற சுவீகரிப்பிற்கு இடமளிக்கப்பட்டு இருந்தது. | எதிர்காலத்தில் கண்டறிந்து பொது நடவடிக்கைகளுக்காக சபைக்கு ஒதுக்கியுள்ள காணிப் பகுதியிற்கு வேலியொன்றை அமைத்து சுவீகரிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |